மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) குடும்ப நலத் திட்ட விளம்பரப் பிரிவு மட்டுமின்றி, வ்வசாயத் துறை போன்ற மற்றைய துறைகளிலுள்ள விளம்பரப் பிரிவுகளையும் தமிழக அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையுடன் இணைப்பது பற்றிய கருத்துரு ஒன்று மிகவும் தொடக்க நிலையிலுள்ளது. தொடர்புடைய துறைகளின் கருத்துக்கள் சேகரிக்கப்படுகின்றன.

தகவல் நிலையங்கள்.

*348 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ் நாட்டிலுள்ள தகவல் நிலையங்கள் (Information Centres) எத்தனை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மூன்று. சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

திரு எஸ். கணேசன் : பல சுற்றுலா மையங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க சிலைகளும் ஓவியங்களும் இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக பூம்புகாரில் சிலப்பதிகார காவியம் சிலைகளாக வடிக்கப்பட்டிருக்கிறது. வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு அந்தச் சிற்பங்களையெல்லாம் விவரிக்கின்ற முறையில் சுற்றுலா இன்பர்மேஷன் சென்டரில் பணியாற்றுகிறவர்களுக்கு பயிற்சி ஏதாவது அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மூலக் கேள்வி செய்தித் துறையிலுள்ள செய்தி நிலையங்கள் பற்றியது. சுற்றுலாத்துறை பற்றிய செய்தி நிலையங்களைப் பற்றித்தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரமுடியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : இத்தகைய செய்தி நிலையங்கள் இப்போது மாநிலத்தில் மூன்று இடங்களில் மட்டும் செயல் படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இப்படிப்பட்ட செய்தி நிலையங்களை ஏற்படுத்துவது தான் பயனுடையதாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

1978 மார்ச் 2]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : செய்தி நிலையங்களை விரிவுபடுத்தக்கூடிய கருத்துக்களை அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூரில் உள்ள 'ஊராட்சி இல்லம்'

*349 வினு—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூரில் கட்டப்பட்டுள்ள 'ஊராட்சி இல்லம்' என்ற கட்டடத்திற்கு மாவட்டத்திலுள்ள ஊராட்சி மன்றங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) மேற்படி ஊராட்சி இல்லத்தின் திறப்புவிழா தமிழ் நாடு ஊரக வளர்ச்சிப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மூலம் நடைபெற்றதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

	ரூபாய்
(அ) ஊராட்சிகளிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது.	1,56,999.50
பேரூராட்சிகளிடமிருந்து நன்கொடையாகப் பெற்றது.	9,170.00
மொத்தம்	1,66,169.50

(ஆ) மேற்படி கட்டடம் ஏதாவது ஒரு அதிகாரபற்றற்ற ஒரு சங்கத்தின் மூலம் இயங்குவது நடைமுறைக்கு உதவும் என்பதாலும், வளர்ச்சித் துறையினருக்கும், இந்தக் கட்டடத்திற்கும் தொடர்பு உள்ளதாலும் திறப்பு விழா ஷை சங்கத்தின் மூலம் நடைபெற்றது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி இல்லத்திற்கு ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர்கள் மூலமாக வசூலித்த தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர்கள் இதற்குப் பணம் வசூலிக்கவில்லை. ஊராட்சிகளிடமிருந்துதான் வசூலிக்கப்பட்டது.